(31.3.2012) இருப்பாய்வு

| பற்றிருப்புகள் | ரூ. | வரவிருப்புகள் | ரூ. |
|---|---|---|---|
| கையிருப்பு ரொக்கம் | 18,000 | மூலதனம் | 2,00,000 |
| அறைகலன் | 30,000 | கழிவு | 14,000 |
| தொடக்க சரக்கிருப்பு | 1,00,000 | விற்பனை | 5,70,000 |
| கொள்முதல் | 3,20,000 | வட்டி பெற்றது | 1,500 |
| முதலீடுகள் (10%) | 25,000 | கொள்முதல் திருப்பம் | 30,000 |
| எடுப்புகள் | 60,000 | கடனீந்தோர் | 1,00,000 |
| சம்பளம் | 72,000 | அநாமத்து க/கு | 10,000 |
| காப்பீடு சந்தா | 12,000 | | |
| வாடகை | 18,000 | | |
| கூலி | 8,000 | | |
| கடனாளிகள் | 1,80,000 | | |
| விற்பனை திருப்பம் | 20,000 | | |
| விளம்பரம் | 40,000 | | |
| பொதுச் செலவுகள் | 22,500 | | |
| | 9,25,500 | | 9,25,500 |

55. கீழ்க்கண்ட இருப்புநிலைக் குறிப்பு தகவல்களிலிருந்து கீழ்க்கண்ட விகிதங்களை கணக்கிடுக.
a) நடப்பு விகிதம் b) நீர்மை விகிதம் c) புற-அக பொறுப்பு விகிதம் d) உரிமையாளர் விகிதம்

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| பங்கு முதல் | 40,000 | நிலை சொத்துக்கள் | 60,000 |
| காப்பு நிதி | 20,000 | நற்பெயர் | 20,000 |
| கடன் | 20,000 | சரக்கிருப்பு | 20,000 |
| கடனீந்தோர் | 20,000 | கடனாளிகள் | 8,000 |
| வங்கிமே.வ. பற்று | 20,000 | பெறு.மாற்று சீட்டு | 4,000 |
| | | ரொக்கம் | 8,000 |
| | 1,20,000 | | 1,20,000 |

56. கீழே தரப்பட்டுள்ள விவரங்களிலிருந்து 2010 மார்ச், ஏப்ரல், மே மாதங்களுக்குரிய ரொக்க திட்டப் பட்டியல் தயாரிக்க.

| மாதம் | கடன் கொள்முதல் ரூ. | கடன் விற்பனை ரூ. | நிர்வாக செலவுகள் ரூ. |
|---|---|---|---|
| 2010 ஜனவரி | 75,000 | 50,000 | 1,20,000 |
| " பிப்ரவரி | 1,00,000 | 1,35,000 | 1,25,000 |
| " மார்ச் | 85,000 | 1,55,000 | 85,000 |
| " ஏப்ரல் | 1,25,000 | 1,20,000 | 70,000 |
| " மே | 90,000 | 1,20,000 | 80,000 |

i) 1.3.2010 ரொக்க இருப்பு ரூ.70,000/- ii) கடனீந்தோர் அளித்த கடனின் காலம் இரண்டு மாதம் iii) கடனாளிகளுக்கு வழங்கிய கடனின் காலம் ஒரு மாதம் iv) செலவுகள் அதே மாதத்தில் செலுத்தப்படுகின்றது v) ஏப்ரலில் நிலைச் சொத்து விற்பது ரூ.25,000/-

57. ஸ்ரீ கிருஷ்ணா ஸ்டீல்ஸ் லிமிடெட் ரூ.10 முகமதிப்புடைய 50,000 பங்குகளை ரூ.4 முனைமத்தில் வெளியிட்டது. அதன் மீது கீழ்க்கண்டவாறு செலுத்தத்தக்கது.
விண்ணப்பத்தின் பொழுது ரூ.3/- ஒதுக்கீட்டின் பொழுது ரூ.7/- (முனைமம் உட்பட)
முதலாவது மற்றும் இறுதி அழைப்பின் போது ரூ.4/-
முதலீட்டாளர்களிடமிருந்து 70,000 பங்குகள் வேண்டி விண்ணப்பங்கள் பெறப்பட்டன. மிகுதியாக பெற்றவற்றுள் 10,000 பங்குகளுக்கு உரியது நிராகரிக்கப்பட்டு, பகுதியளவு ஒதுக்கீடு செய்யப்பட்டது. அனைத்து தொகையும் அழைக்கப்பட்டு முழுவதும் பெறப்பட்டது.
அந்நிறுமத்தின் குறிப்பேட்டில் இவை குறித்த பதிவுகள் தந்து, முக்கியமாக தேவைப்படும் பேரேட்டு க/குகள் தயாரித்து, இருப்புநிலைக் குறிப்பு தயார் செய்க. (வங்கி க/கு, ப.முதல் க/கு, ப.முனைம க/கு)

*****

# இரண்டாம் திருப்புதல் பொதுத் தேர்வு - 2017

**M** பன்னிரெண்டாம் வகுப்பு Reg.No. ______

## கணக்குப்பதிவியல்

நேரம்: 3.00 மணி மதிப்பெண்கள்: 200

### பகுதி - அ

அனைத்து வினாக்களுக்கும் விடையளி: 30 x 1 = 30

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. கூடியுள்ள வருமானம், இருப்புநிலைக் குறிப்பில் _______ பக்கத்தில் தோன்றும்.
2. முதல் மீதான வட்டி _______ கணக்கில் பற்று வைக்கப்படும்.
3. இருப்பாய்வில் கொடுக்கப்பட்டுள்ள வங்கி கடன் (12%) ரூ.5,00,000. வட்டி செலுத்தியது ரூ.45,000 எனில், நிலுவையிலுள்ள வட்டி ரூ._______.
4. நிலை அறிக்கை முறை _______ முறை எனவும் அழைக்கப்படும்.
5. ஒரு வர்த்தக நிறுவனத்தின் சொத்துக்கள் ரூ.1,20,000. அதன் பொறுப்புகள் ரூ.40,000. அதன் முதல் ரூ._______.
6. ஒவ்வொரு ஆண்டும், சொத்தின் ஏட்டு மதிப்பு மீது தேய்மானம் கணக்கிடும் முறை _______ முறை எனப்படும்.
7. இயந்திரம் ஒன்றின் விற்பனை விலை ரூ.85,000/-. அதனை விற்றதில் ஏற்பட்ட நட்டம் ரூ.18,000/- எனில் அதன் புத்தக மதிப்பு _______.
8. _______ விகிதங்கள் ஒரு நிறுவனத்தின் நடப்பு நிலுவைகளை செலுத்தும் திறனை அளவிட உதவுகிறது.
9. தொடக்க சரக்கிருப்பு ரூ.15,000 கொள்முதல் ரூ.65,000 மற்றும் இறுதி சரக்கிருப்பு ரூ.30,000. விற்ற பொருளின் அடக்கவிலை _______ ஆகும்.
10. மார்ச் மாத தொடக்க இருப்பு ரூ.11,250, அம்மாத ரொக்க பெறுதல்கள் ரூ.14,300 மற்றும் மொத்த செலுத்தல்கள் ரூ.13,750 எனில், ஏப்ரல் மாத தொடக்க இருப்பு ரூ._______.
11. கூட்டாளிகளின் முதல் கணக்குகள் நிலை அல்லது _______ முதலாக இருக்கும்.
12. புதிய கூட்டாளியை சேர்க்கும் போது (அ) விலகும் போது _______, _______ மறு மதிப்பீடு செய்வது அவசியமாகும்.
13. கூட்டாளிகள் விலகும் போது, தொடரும் கூட்டாளிகள் _______ பெறுகின்றனர்.
14. நிறுமத்தால் வெளியிடக்கூடிய அதிகபட்ச முதல் தொகை _______ என அழைக்கப்படும்.
15. பொது வெளியீடு _______ நாட்களுக்கு அதிகமாக அனுமதிக்கப்படுவது இல்லை.

**II. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

16. இறுதிச் சரக்கிருப்பு என்பது
a) இலாப நட்டக் க/கில் b) வியாபார க/கில் மட்டும் c) வியாபார க/கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பில்
17. எடுப்பு மீதான வட்டி _______ யிலிருந்து கழிக்க வேண்டும். a) செலவு க/கு b) முதல் க/கு c) வருமான க/கு
18. ஒற்றைப் பதிவு முறை a) ஒரு முழுமையற்ற இரட்டை பதிவு முறை
b) ஒரு அறிவியல் பூர்வமான பதிவு முறை c) இந்த இரண்டும் இல்லை
19. ஒற்றைப் பதிவு முறையில், கடன் கொள்முதலை காண, _______ க/கு தயாரிக்கப்படுகிறது.
a) மொத்த கடனாளிகள் க/கு b) மொத்த கடனீந்தோர் க/கு c) செலு.மாற்று சீட்டு க/கு
20. நிலை சொத்து விற்றதில் கிடைத்த இலாபம் பற்று வைக்கப்படுவது
a) நிலை சொத்து க/கு b) தேய்மான க/கு c) இலாப நட்ட க/கு
21. ஒரு கணிப்பொறியின் அடக்கவிலை ரூ.40,000. அதன் மீது குறைந்து செல் மதிப்பு அடிப்படையில் 10% தேய்மானம் நீக்கப்படுகிறது. மூன்று வருட முடிவில், அதன் புத்தக (ஏட்டு) மதிப்பு ரூ._______.
a) 32,400 b) 29,160 c) 28,000
22. செயல்பாட்டு விகிதங்கள் _______ ல் வெளியிடப்படும். a) மடங்கு b) விகிதாச்சாரம் c) சதவீதம்
23. பங்குதாரர் நிதி என்பது _______ உள்ளடக்கியது. a) பொது நிலை, முன்னுரிமை பங்கு முதல், காப்பு மிகுதியும்
b) பங்கு முதல், பொது காப்பு மற்றும் நீண்ட கால கடன்
c) வங்கிகள், நிதி நிறுவனங்களிடம் பெற்ற கடன்கள்
24. திட்டப்பட்டியல் _______ காலத்திற்கான ஒரு மதிப்பீடு ஆகும். a) நடப்பு b) கடந்த c) எதிர்
25. கூட்டாண்மையில், முதல் மீதான வட்டி கணக்கிடப்படுவது
a) தொடக்க முதல் மீது b) இறுதி முதல் மீது c) சராசரி முதல் மீது
26. ஒரு கூட்டாளி மாதந்தோறும் இறுதியில் முறையாக குறிப்பிட்ட தொகை எடுப்பாக எடுத்து வந்தால், வட்டிக்குரிய சராசரி காலம் a) 13/24 மாதங்கள் b) 12/24 மாதங்கள் c) 11/24 மாதங்கள்
27. புதிய கூட்டாளி சேர்ப்பின் போது, புதிதாக நற்பெயர் உருவாக்கப்படுவது _______ க/கில் பற்று வைக்கப்படும்.
a) மறுமதிப்பீடு க/கு b) நற்பெயர் க/கு c) கூட்டாளியின் முதல் க/கு
28. ஒரு கூட்டாளி விலகலின் போது, அவருக்குரிய தொகையை கடன் க/கிற்கு மாற்றும் போது அவருக்குரிய அளிக்கப்படும் வட்டி வீதம் _______. a) 5% b) 6% c) 9%

29. செபியின் கட்டளைப்படி ஒரு நிறுமம் கோரும் விண்ணப்பப் பணம் அதன் வெளியீட்டு விலையில் ______ ஆக இருத்தல் வேண்டும். a) 15% b) 25% c) 35%

30. அட்டவணை 'அ' யின்படி, அழைப்பு நிலுவை மீது விதிக்கப்படும் வட்டி ______. a) 4% b) 5% c) 6%

பகுதி - ஆ

**II. எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி:** 10 x 5 = 50

31. வாரா ஐயக்கடன் ஒதுக்கு என்றால் என்ன?
32. ஒற்றை பதிவு முறை - வரைவிலக்கணம் தருக.
33. ஏதேனும் ஐந்து தேய்மானம் கணக்கிடும் முறைகளைக் கூறுக.
34. நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் முக்கியத்துவம் யாவை?
35. ரொக்க பெறுதல்களுக்கு ஏதேனும் ஐந்து உதாரணங்கள் தருக.
36. ஆதாய விகிதம் - குறிப்பு தருக.
37. விகிதஅளவு ஒதுக்கீடு என்பதன் பொருள் யாது?
38. எடுப்பு மீதான வட்டி ரூ.5,000/-. சரிகட்டு பதிவு மற்றும் மாற்று பதிவு தருக.
39. விடுபட்ட தகவலைக் காண்க.
தொடக்க முதல் ரூ.24,000 அந்த ஆண்டின் இலாபம் ரூ.9,000
கூடுதல் முதல் ரூ.12,000 இறுதி முதல் ரூ.39,000 எடுப்பு?
40. கீழ்க்கண்ட தகவல்களைக் கொண்டு தேய்மான விகிதம் கணக்கிடுக.
இயந்திரத்தின் அடக்கவிலை ரூ.2,30,000 பொருத்துகை செலவு ரூ.20,000
எதிர்பார்க்கும் ஆயுள் காலம் 10 ஆண்டுகள் இறுதி மதிப்பு ரூ.50,000
41. புற அகப் பொறுப்பு விகிதம் காண்க.
நேர்மை பங்கு முதல் ரூ.2,00,000 பொதுக் காப்பு ரூ.1,50,000
கடன் பத்திரங்கள் ரூ.1,00,000 நீண்ட காலக் கடன் ரூ.75,000
42. "அ" மற்றும் "ஆ" கூட்டாளிகள் 3:2 விகிதத்தில் வாணிகம் செய்து வந்தனர். அவர்கள் "இ" என்பவரை 1/5 பங்குக்கு புதிய கூட்டாளியாக சேர்த்தனர் எனில் அம்மூவரின் புதிய இலாப-பகிர்வு விகிதம் கணக்கிடுக.
43. 2015 ஜனவரி 1 ரொக்க இருப்பு ரூ.2,50,000; அம்மாத திட்டமிட்ட ரொக்க பெறுதல்கள் ரூ.60,000; அம்மாத திட்டமிட்ட ரொக்க செலுத்தல்கள் ரூ.40,000. 2015 பிப்ரவரி மாத தொடக்க ரொக்க இருப்பு என்ன?
44. சண்முகம் வரையறு நிறுமம் ரூ.10 முகமதிப்புடைய 50,000 பங்குகளை ரூ.3 முனைமத்துடன் வெளியிட்டது. குறிப்பேட்டுப் பதிவு தருக.

பகுதி - இ

**III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி:** *(45 கட்டாய வினா)* 5 x 12 = 60

45.a) 31.3.2015 இருப்பாய்வில் இடம் பெற்றுள்ளவை.
பற்பல கடனாளிகள் ரூ.1,25,000 வாராக் கடன் ரூ.10,000
சரிக்கட்டுதல்கள்: i) போக்கெழுத வேண்டிய வரா கடன் ரூ.5,000/- ii) கடனாளி மீது 5% ஐய கடன் ஒதுக்கு உருவாக்குக iii) கடனாளி மீது 2% தள்ளுபடி ஒதுக்கு உருவாக்குக. (அல்லது)

b) திரு.விக்னேஷ் ஒற்றைப் பதிவு முறையில் க/குகள் எழுதி வருகிறார். 31.3.2011 மற்றும் 31.3.2012 நிதிநிலை தகவல்கள் தரப்பட்டுள்ளன.

| | 31.3.2011 ரூ. | 31.3.2012 ரூ. |
|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 15,000 | 25,000 |
| அறைகலன் | 10,000 | 20,000 |
| ப.கடனாளிகள் | 65,000 | 90,000 |
| சரக்கிருப்பு | 35,000 | 50,000 |
| ரொக்கம் | 10,000 | 40,000 |

அவர், ஆண்டிடையில் இட்ட கூடுதல் முதல் ரூ.15,000/-; அவர் சொந்த செலவிற்காக எடுத்தது ரூ.20,000/-; அறைகலன்மீது 10% தேய்மானம் நீக்குக, 2011-12 ஆண்டுக்கான இலாப-நட்டத்தை காண்க.

46. தேய்மானம்-வரைவிலக்கணம் தருக. தேய்மானம் நீக்க வேண்டியதற்கு காரணங்கள் யாவை?
47. ரொக்க திட்டப்பட்டியல் என்றால் என்ன? அதன் இயல்புகள் மற்றும் நன்மைகள் யாவை?
48. நிலை முதல் மற்றும் மாறுபடும் முதல் முறை - வேறுபடுத்துக.
49. ஒரு ஆடை தயாரிப்பு நிறுவனம் 1.4.2010 அன்று ரூ.2,40,000 க்கு ஒரு இயந்திரத்தை வாங்கியது. அதனை பொருத்துவதற்கு ரூ.10,000 செலவு செய்தது. மூன்று ஆண்டுகள் பயன்படுத்திய பின்பு ரூ.1,20,000 க்கு விற்றது. குறைந்து செல் மதிப்பு முறையில் 10% தேய்மானம் கணக்கிடப்பட்டது. மார்ச் 31ல் க/கு முடிக்கப்படுகிறது எனக் கொண்டு இயந்திர க/கு & தேய்மான க/கு மூன்று வருடங்களுக்கு தயாரிக்கவும்.



50. கீழ்க்கண்ட தகவல்களிலிருந்து i) மொத்த இலாப விகிதம் ii) நிகர இலாப விகிதம் iii) இயக்க இலாப விகிதம் கணக்கிடுக.
விற்பனை ரூ.2,00,000, மொத் இலாபம் ரூ.50,000, அலுவலக செலவு ரூ.2,000, அறைகலன் விற்றதில் நட்டம் ரூ.1,600, விற்பனை செலவு ரூ.3,000, வட்டி பெற்றது ரூ.800, நிகர இலாபம் ரூ.32,000

51. திரு.சாமுவேல் மற்றும் திரு.விக்டர் என்ற கூட்டாளிகளின் முதல் க/குகளை மாறுபடும் முறையில் தயாரிக்க.

| | சாமுவேல் ரூ. | விக்டர் ரூ. |
|---|---|---|
| 1.4.2011 முதல் | 60,000 | 80,000 |
| 2011-12 எடுப்புகள் | 15,000 | 12,000 |
| ஊதியம் | 8,000 | --- |
| கழிவு | --- | 6,000 |
| இலாபப் பங்கு | 8,000 | 12,000 |
| முதல் மீது வட்டி (6%) | ? | ? |
| எடுப்பு மீது வட்டி (10%) | ? | ? |

52. தி/ள் சூர்யா எலக்ட்ரிக்கல் லிமிடெட், ரூ.100 முகமதிப்புடைய 500 பொதுநிலை பங்குகளை 10% தள்ளுபடியில் வெளியிட்டது. இறுதி அழைப்பு ரூ.20 செலுத்தத் தவறியதால் ஒறுப்பிழப்பு செய்தது. அந்த பங்குகளை ரூ.70 விலையில் மறுவெளியீடு செய்தது.
இவை குறித்த பதிவுகள் தந்து, பங்கு ஒறுப்பிழப்பு க/கு, முதலின காப்பு க/கு தயாரிக்கவும்.

பகுதி - ஈ

**IV. எவையேனும் 3 வினாக்களுக்கு விடையளி:** *(53 கட்டாய வினா)* 3 x 20 = 60

53.a. திரு.முருகன், க/கு ஏடுகளை முழுமை பெறாத இரட்டைப் பதிவு முறையில் வைத்துள்ளார். கீழ்க்கண்ட விபரங்களிலிருந்து அவரது 31.3.2013 ஆண்டுக்கான இறுதிக் க/குகளை தயாரிக்க.

| | 1.4.2012 ரூ. | 31.3.2013 ரூ. |
|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 75,000 | 92,500 |
| அறைகலன் | 5,000 | 10,000 |
| ரொக்கம் | 12,500 | 20,000 |
| ப.கடனாளிகள் | 1,25,000 | 1,75,000 |
| சரக்கிருப்பு | 50,000 | 25,000 |

இதர விபரங்கள்: எடுப்பு ரூ.10,000, பெற்ற தள்ளுபடி ரூ.5,000, அளித்த தள்ளுபடி ரூ.7,000, கடனீந்தோருக்கு செலுத்திய ரொக்கம் ரூ.1,25,000, கடனாளியிடமிருந்து பெற்ற ரொக்கம் ரூ.1,50,000, வெளி திருப்பம் ரூ.2,500, உள் திருப்பம் ரூ.3,750, பற்பல செலவுகள் ரூ.7,500, அறைகலன் மீது 5% தேய்மானம் நீக்குக. (அல்லது)

b) அமர், அக்பர் கூட்டாளிகளின் 31.3.2011 நாளைய இருப்புநிலைக் குறிப்பு கீழே தரப்பட்டுள்ளது. இலாப-பகிர்வு விகிதம் 3:2 ஆகும்.

| பொறுப்புகள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 70,000 | கைவச ரொக்கம் | 20,000 |
| செலு.மாற்று சீட்டு | 30,000 | வங்கி வச ரொக்கம் | 10,000 |
| பொது காப்பு | 10,000 | பற்பல கடனாளிகள் | 30,000 |
| முதல் க/கு | | சரக்கிருப்பு | 20,000 |
| அமர் 60,000 | | பொறி, பொறித்தொகுதி | 40,000 |
| அக்பர் 40,000 | | நிலம், கட்டிடம் | 70,000 |
| | 1,00,000 | நற்பெயர் | 20,000 |
| | 2,10,000 | | 2,10,000 |

1.4.2011, திரு.அந்தோணி அவர்களை புதிய கூட்டாளியாக கீழ்க்கண்ட மாற்றங்களுடன் சேர்த்துக் கொண்டனர். அவையாவன:
i) திரு.அந்தோணி கொண்டு வரும் முதல் ரூ.30,000/- ii) நற்பெயரின் மதிப்பு ரூ.40,000/- ஆக உயர்த்துவது iii) நிலம் & கட்டிடத்தின் மதிப்பை 10% அதிகரிப்பது iv) சரக்கிருப்பின் மதிப்பில் ரூ.2,000/- குறைப்பது. v) கொடுபடா செலவிற்கு ரூ.5,000/- க்கு ஒதுக்கு உருவாக்குவது.
மாற்றியமைக்கப்பட்ட கூட்டாண்மை நிறுவனத்தின் மறுமதிப்பீடு க/கு, முதல் க/குகள் மற்றும் இருப்புநிலைக் குறிப்பை தயாரிக்க.

54. கீழ்க்கண்ட 31.3.2012 நாளைய இருப்பாய்விலிருந்தும், சரிக்கட்டுதல்களுடன் திரு.அருள் பிரகாசம் அவர்களின் இறுதிக் க/குகளை தயாரிக்கவும்.
i) இறுதி சரக்கிருப்பு ரூ.80,000/-, ii) பயன்தரா காப்பீடு ரூ.3,000/-, iii) முன்கூட்டி பெற்ற கழிவு ரூ.2,000/- iv) முதலீடு மீது வட்டி நிலுவையில் உள்ளது. v) முதல் மீது 6% எடுப்பு மீது 8% வட்டி கணக்கிடுக.